14—

தமிழக வனக்கல்லூரிகளை மத்திய அரசு மேற்கொள்ளுதல்

***23340*–திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசினால் நடத்தப்பட்டு வரும் வனக்கல்லூரிகளை மத்திய அரசு எடுத்துக் கொள்ள உள்ளதா?

(ஆ) அதற்கான விவரங்கள், மற்றும்

(இ) இது சம்பந்தமாக மாநில அரசு தனது உரிமைகளை உறுதிப்படுத்தி உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) : 1988 ஆம் ஆண்டு வரை கோவை தென் பிராந்திய வனச்சரகர்கள் கல்லூரியினை மத்திய அரசு நடத்தி வந்து மீண்டும் அதை நிறுத்திகொண்டது. அதற்குப் பிறகு தற்போது மத்திய அரசு திரும்ப தன் பொறுப்பில் எடுத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளதால், நீண்டகால குத்தகை அடிப்படையிலும், இக் கல்லூரியை தமிழ்நாட்டை விட்டு வெளியே மாற்றக்கூடாது என்ற நிபந்னையின் பேரிலும் மத்திய அரசிடம் ஒப்படைக்க தமிழக அரசு இசைவு தெரிவித்துள்ளது. இதைத் தவிர்த்து, தமிழகத்தில் பல்வேறு வனக் கலலூரிகள் இருக்கின்றன. அவ்வனக் கல்லூரிகளை நேரடியாக எடுத்துக் கொள்வதற்கு மத்திய அரசுக்கு உரிமை எதுவுமில்லை. தமிழகத்தை ஆளுகின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு மாநிலத்தினுடைய உரிமைகளை பேணிப் பாதுகாக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–50

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வனக் கல்லூரியில் 1988 ஆம் ஆண்டுக்குப் பிறகு இங்கே வனச் சரக அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டு வந்த பயிற்சி நிறுத்தப்பட்டு விட்டதன் காரணமாக தென் மாநிலங்களிலுள்ள வனச்சரக அதிகாரிகளை வட மாநிலங்களிலுள்ள அந்தந்த மாநில

1994 நவம்பர் 4]

அரசுகளால் நடத்தப்பட்டு வருகின்ற வனக் கல்லூரிகளுக்கு பயிற்சிப் பெறுவதற்காக அனுப்ப வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. அப்படி வட மாநிலங்களில் அளிக்கப்பட்டுவரும் அந்தப் பயிற்சி நம்முடைய தென் மாநிலங்களிலுள்ள காடுகளை மேம்படுத்துவதற்கு உகந்ததாக இல்லை. ஏனெனில் வட இந்திய காடுகளுக்கும், தென் இந்திய காடுகளுக்கும் அடிப்படை வித்தியாசம் இருக்கின்றது. அப்படிப்பட்ட வட இந்தியப் பகுதிகளில், அந்தக் காட்டுப் பகுதிகளில் பயிற்சி பெற்று, அந்தக் காடுகளின் மேம்பாடுகள் பற்றி பயின்று வந்த அதிகாரிகள் நம் தென் மாநிலங்களிலுள்ள காடுகளைப் பராமரித்து மேம்படுத்துவதில் இடர்பாடுகள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த குறைபாடுகளைப் போக்கும் பொருட்டு அப்பொழுது மத்திய மண்டல வனப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த பிரிட்டிஷ் அதிகாரி எப்.ஏ. லாட்ஜ் என்பவரின் பெரு முயற்சியால் கோயம்புத்தூரில் கொண்டு வரப்பட்ட அந்த வனச் சரகக் கல்லூரியை மீண்டும் மத்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு முன்பாக அங்கு ரெகுலர் ரேஞ்சர் ட்ரெயினிங் கோர்ஸ் ஒன்று உடனடியாக நடத்தப்பட வேண்டுமென்ற நிபந்தனையோடு மற்றும் அங்குள்ள டீச்சிங் ஸ்டாப், நான்-டீச்சிங் ஸ்டாப் ஆகிய பணிகளுக்கு மாநில அரசு ஊழியர்களையே நியமிக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் வலியுறுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு வனச் சரகர்களுக்கு கீழ் பதவி வகிப்பவர்களை மாநில அரசே அவர்களுக்குரிய பயிற்சியைக் கொடுக்க வேணடும் என்கிற ஒரு கொள்கை முடிவு எடுத்த பின்னர் நாம் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தற்போது வனச் சரகர்கள் நேரடியாக நியமனம் செய்வது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. காரணம் கீழே இருக்கிற வனவர்கள்-பாரஸ்டர்ஸ்-இவர்களுக்கு புரமோஷன் வாய்ப்பு இல்லாத காரணத்தால், இந்தக் கல்லூரியில் இப்போது படிப்பதற்குத் தேவையான மாணவர்களை தமிழக அரசால் அனுப்ப முடியாத நிலைமை இருக்கிறது. இதைத் தவிர்த்து, இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் பல்வேறு மாநிலங்களிலிருந்து மாணவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். தற்போது அவர்கள் வருவதில்லை என்பதோடு, வந்தால் அதற்குரிய செலவினங்களையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. எனவே, இந்த் அரசு, இந்தக் கல்லூரியை நடத்திக்கொணடிருக்கிற இச்சூழ்நிலையில் சுமார் 25 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் செலவாகிற நிலைமை

இருக்கிற காரணத்தாலேயும், மாணவர்களை அங்கே படிக்க வைப்பதற்கு அரசுக்கு சரியான வடிவம் இல்லாமல் இருக்கிற சூழ்நிலையிலே இது நடத்தப்படாமல் இருக்கிறது. ஆனாலும் இந்தக் கல்லூரி மூலமாக நம்முடைய வனத் துறையில் இருக்கிற ஊழியர்கள், அதிகாரிகளுக்கு இன்-சர்வீஸ் கோர்ஸ் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிற காரணத்தால், இந்த அதிகாரிகள் மிகத் திறமையாக இருக்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரில் இருக்கிற அந்த வனக் கல்லூரி 1912 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான், உகாண்டா, மலேசியா, பிரிட்டன், சிலோன், கானா, பிஜி போன்ற உலகில் பல்வேறு நாடுகளிலிருந்து வந்த அதிகாரிகள் பயிற்சி பெற்றதுடன் நமது தமிழ்நாட்டிலுள்ள வன அதிகாரிகளுக்கும், கால்நடைப் பராமரிப்பு மற்றும் தோட்டக்கலை, மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு போன்றவற்றில் சிறப்பான பயிற்சி அளித்து வனத் துறையினுடைய ஒரு வரப்பிரசாதமாகவே இந்தக் கல்லூரி அமைந்திருந்தது. அப்படிப்பட்ட அந்தக் கல்லூரியை தொடர்ந்து நடத்துவதற்கு மாநில அரசுக்கு நிதியுதவி இல்லையென்றாலும் ஏற்கெனவே வட மாநிலங்களில் இதுபோன்ற கல்லூரிகள், குறிப்பாக உத்திரபிரதேசம், குஜராத், ஒரிஸ்ஸா, மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் அந்தந்த மாநில அரசுகளால் நடத்தப்படுகின்ற அந்தக் கல்லூரிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்கிறதா என்பது பற்றியும், அதனுடைய செயல்பாடுகள் பற்றியும் அறிந்து வருவதற்காக ஒரு வல்லுநர் குழு அமைத்து அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் கோயம்புத்தூர் கல்லூரியை மத்திய அரசாங்கத்திற்கு ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா? அந்த வல்லுநர் குழுவினுடைய முடிவின் அடிப்படையை வைத்து ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா என்றும், மேலும் கோயம்புத்தூர் வனக் கல்லூரிக்கு மத்திய அரசு நிதியுதவி அளிப்பதற்கும் அரசு வலியுறுத்த ஆவன செய்யுமா எனறும் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 முதல் மைய அரசே நடத்தி வந்தது. எனவே 1988-க்குப் பின்னர் அவர்கள் நிறுத்திய பின்னர் நாம் அதைத் தொடர்ந்து நடத்தவில்லை. எனவே அந்தச் சூழ்நிலையில் மைய அரசு கேட்டவுடன் நாம் அதற்கு இசைவைக் கொடுத்தோம். ஆனால்

1994 நவம்பர் 4]

இன்றைக்கு இருக்கிற ஒரு புதிய பரிணாம வளர்ச்சியில் புதிதாக வேலைவாய்ப்புகள் அல்லது நேரடி நியமனம் குறித்து இதில் அரசு ஒரு கருத்துரு கொண்டிருக்கிறது. அதனுடைய அடிப்படையில் இன்றைக்குத் தேர்வாணைக் குழுவினுடைய பரிசீலனையிலே அது இருக்கிறது. அது முடிவுறுமேயானால் மீண்டும் இந்த அரசு வனச் சரகர்களுக்கு நேரடியாக பயிற்சி அளிக்க வேண்டுமென்று கருதுமேயானால் அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 15, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

15—

மழைநீர் சேமிக்கும் திட்டத்தின் பயனை செய்திப்படம் மூலம் ஒளிபரப்புதல்

***24940–திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மழைநீர் சேமிக்கும் திட்டத்தின் பயனை செய்திப் படமாக தயாரித்து தமிழகம் முழுவதும் ஒளிபரப்பிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் மழை நீரைச் சேமித்து வைத்தால் கோடைக் காலங்களில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது, அது மிகவும் பயனுடையதாக இருக்கும். எனவே அரசு மறுபரிசீலனை செய்து, மழைக்காலங்களில் மழை நீரைச் சேமிக்கும் அந்தத் திட்டத்தின் பயனைச் செய்திப்படமாகத் தயாரித்து, தமிழகம் முழுவதும் ஒளிபரப்பிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.